
# தமிழ்ச்சிட்டு

குரல் 23

இசை 9



தென்மொழி இணைப்பு

கன்னி (செபுதம்பர் 2000)

சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ்

## மாட்டு வண்டி !

கட்டுச் சோற்றைக் கட்டினார்.
காளை மாட்டைப் பூட்டினார்.
எட்டுக் கற்கள் போகவே,
ஏழு மணியை ஓட்டினார்!

ஒற்றை மாட்டு வண்டியாம்!
ஊர்ந்து போகும் வண்டியாம்!
நத்தை போல மெல்லமாய்,
நகர்ந்து போகும் வண்டியாம்!
தாத்தா ஏறிப் போனதாம்;
'தடக்குப் புடக்கு' வண்டியாம்!
கூத்துப் பார்க்கப் போகவே
குடும்பம் போன வண்டியாம்!


கற்கள் நிறைந்த தடத்திலும்,
காட்டுப் பாதை, மணலிலும்,
முட்கள் சேர்ந்த வழியிலும்
முனைந்து போகும் வண்டியாம்!

அரிசி, உப்பு, மூட்டைகள்,
அடுக்கு சட்டி, பானைகள்
உரசிக் கொண்டு இராப்பகல்
ஊர்ந்து போகும் வண்டியாம்!

இரும்புப் பட்டை சுற்றிய
இரண்டு பெரிய சக்கரம்!
பிரம்பு, மூங்கில் பின்னிய
பெரிய கூடு மேற்புறம்!

மொட்டை யான வண்டியாம்!
முடுக்க மான எருதுகள்!
கட்டை தூக்கிப் போய்வரும்!
கரும்புக் கட்டும் மேல்வரும்!

வைக்கோல் போரும் ஏற்றிடும்!
வண்டல் மணலும் நிரப்பிடும்!
கைக்கோல் ஒன்று வேண்டுமே;
காளை தம்மை விரட்டவே!



## வாழ்க்கை பொது

செந்தமிழ் வயலில், செந்தமிழ்ப் பயிரில்
சேரும் களைகள் எல்லாம்,
இந்தியென் றொன்றாம்; வடமொழி ஒன்றாம்!
இவைநம் நெஞ்சின் முள்ளாம்!

தமிழர் வாழ்வைத், தமிழர் வளப்பைத்
தாவிக் கடித்திடும் நாயாம்!
தமிழர் நாட்டில் அவற்றின் வளர்ச்சி
தணிப்பறி யாப்பெருந் தீயாம்!

இவற்றை எண்ணுக; ஏற்றவை செய்க!
எந்தமிழ் இளைஞரின் உள்ளம்!
கவின் செயப் புகுந்தால் நம்மவர் படைகள்
கரையுடைப் பெடுத்த வெள்ளம்!

தனித்தமிழ் ஆக்கம், தமிழ்நெஞ் சூக்கம்
தமிழர்க் கிக்கால் வேண்டும்
முனித்தெழ மக்களை, இளைஞர் எல்லாம்
தூண்டுக தூண்டுக யாண்டும்!

புதுமை எழுதுக; புதுமை பேசுக;
புன்மைச் செயல்களைப் போக்க!
கதைகள் நிறுத்துக; கனன் றுளம் பொங்குக!
கனித்தமிழ் மொழியினைக் காக்க!

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு


குரல் : 23, இசை : 9

தென்மொழி
கன்னி 2031 (செபுதம்பர். 2000)
இதழின் இணைப்பு

நிறுவனர்
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**



அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தென்மொழி'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 227 0231


## உடல் குறையும் அறிவுக் குறையும்.

நம்மில் சிலருக்கு உடல் உடற்குறை இருக்கலாம். கண் இழந்தும், கேட்புத்திறன் இழந்தும், ஊமையாய் இருந்தும், அல்லது கை, கால் இழந்துமான நிலையில் தங்கள் வாழ்க்கையை அவர்கள் நடத்திக் கொண் டிருப்பார்கள்.

அவர்களுக்கு அது பெருந்தொல்லை யானாலும், அந்த இழப்பு நிலை அறியாமல் தாம் எவ்வாறு வாழ்வது என அவர்கள் தங்களைப் பழக்கிக் கொண்டனர்.

எனவே, அவ் உறுப்புகளின் இழப்பு அவர்களின் வாழ்க்கைக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்துவதில்லை.

உறுப்புக் குறையுற்ற பலர் மிகச் சிறப்புற்றவர்களாக வளர்ந்தது பற்றி நாம் தெரிந்திருக்கிறோம்.

மேலும், உடலால் குறையுற்றவர்கள் தாங்கள் இந்த வகையில் குறையுடையவர்கள் எனத் தங்களின் இயலாத நிலையை உணர்ந்தவர்கள். அப்படியாக இயலாதவர்கள் எனச் சொல்லிக் கொள்ள வருத்தப்படுவதில்லை.

ஆனால் நம்மில் பெரும்பான்மையோர் அறிவுக்குறை படைத்தவர்களாகவே இருக்கின்றனர்.

உலக அளவில் விரிந்து வளர்ந்து கொண்டிருக்கிற பேரறிவின் வளர்ச்சியில் ஓர் அணு அளவுகூட நாம் பெற இயலாத நிலையில், அறிவுத் தேடலில் அறிவைப் பலர் வளர்த்துக் கொள்வதில்லை.

வளர்ச்சியற்ற அறிவு குறைபட்டு முனை மழுங்கிக் கிடக்கிறது அவர்களுக்கு.

ஆனால் அவர்கள் தாங்கள் அறிவுவழி குறைபட்டவர்கள் எனச் சொல்லிக் கொள் வதும் இல்லை; அதற்காக வருந்துவதும் இல்லை.

தாம் ஏதோ நிரம்ப அறிந்தவர்கள் போன்ற பொய்ம்மை வாழ்க்கையையே அவர்கள் வாழ்கின்றனர்.

ஏன் - எதற்கு - என்று கேள்வி எழுப்பி, தம்மின் ஒவ்வொரு அறியாமைச் செயலையும் நாம் விட்டு ஒழிப்பதில்லை.

அறிவைப் பெறுவதில் நமக்கு ஆர்வம் இருப்பதில்லை.

திரைப்படங்களும், தொலைக்காட்சிகளும், மதவியல் கொண்டாட்டங்களும், விளையாட்டுகளும் இன்றைக்கு நம் அறிவை மழுங்கடிக்கவே செய்கின்றன.

அவற்றின் வழிப் பரப்பப்படுகிற செய்திகள் நம் அறியாமையையே வளர்க்கின்றன.

அறிவு குறைபட்டுப் போனதால் நம் வாழ்க்கை இருண்டுபோய்க் கிடக்கிறது.

நம் இளைஞர்களின் உள்ளமும் அறிவும் இருளடைந்து, நம்பிக்கையற்றுப் போகின்றன.

அறிவே அந்த இருளைப் போக்குகிற மருந்து என நாம் அறிதல் வேண்டும். உடல் குறையைக் காட்டிலும், அறிவுக் குறையே நம் வாழ்க்கையைப் பாழாக்குகிறது.

உடல் குறையுற்றவர்க்கு அந்த ஓர் உறுப்பின் செயல்தான் இல்லாமல் போகும்; ஆனால் அறிவுக் குறையுற்றவர்க்கோ வாழ்க்கையே இல்லாமல் இருள் படிந்து விடுகிறது.

எனவே, தம்பி, தங்கைகளே நம் அறியாமை இருளைப் போக்கி, நாம் அறிவுக் குறையுற்றவர்களாக இல்லாமல் ஒளி பொருந்தியவர்களாக வேண்டும் தானே.

**அறிவுக் குறையை விரட்டுவோம் . . .!**

**அறிவு ஒளியைப் பெறுவோம்!**

தமிழ் மண்ணின் பழமொழிகள் சில . . .

- ஆண்டை மேல் சினத்தைக் கடாவின் மேல் ஆற்றினான்.
- ஆ வேறு நிறமானாலும் பால் வேறு நிறமாகுமா?
- மேய்கிற மாட்டை நக்குகிற மாடு கெடுத்தாற் போல
- வீட்டுச் செல்வம் மாடு, தோட்டச் செல்வம் முருங்கை.
- ஆனை வயிறு நிறைந்தாலும் ஆட்டின் வயிறு நிறையாது.
- குருடன் ஆடு மேய்க்க எட்டாளுக்கு வேலை.
- நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடுகேட்கும்.
- ஆக்குகிறவன் சலித்தால் அடுப்புப் பாழ்;<br>குத்துகிறவன் சலித்தால் குந்தாணி பாழ்.
- கொழுத்த நண்டு வளையில் தங்காது.
- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

# வியப்பான செய்திகள் சில . . .

உருசிய விலங்குக் காட்சிச் சாலையில் மிகவும் செல்லமாக வளர்ந்த யானை திடுமென ஒருநாள் இறந்து போனது. யானை இறந்த போது அதற்கு 55- அகவைகூட ஆகவில்லை. அந்த விலங்குக் காட்சிச் சாலைக்கு வந்த பார்வையாளர்கள் எல்லாம் மிகவும் கவலையுற்றனர்.

"ஆமாம். . . யானையின் அகவை இருநூறு ஆண்டுகள் என்று சொல்வார்களே, எப்படி இந்த யானை 55 - ஆண்டுகளிலேயே இறந்து போனது" என்றார் ஒருவர்.

அதற்கு, விலங்குகள் பற்றிய அறிஞர் அதுபற்றி விளக்கமாகச் சொன்னார்:

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள பல்வேறு விலங்குக் காட்சிச் சாலைகளில் வாழ்ந்த நாற்பத்து நான்கு ஆசிய யானைகளின் வாழ்நாள் காலம் ஏறத்தாழ 40-முதல் 55 ஆண்டுகளாகவே இருந்தது.

யானைகள் இதைவிட அதிகக் காலம் வாழமுடியும் என நம்புவது கடினம். ஏனெனில் அவற்றின் வாழ்க்கை பெரும்பாலும் அவற்றின் பற்களையே சார்ந்திருக்கின்றன.

யானைக்குத் தாடைக்கு இரண்டாக நான்கு கடைவாய்ப் பற்கள் உண்டு.

பெரிய அளவிலான அதன் பற்களால் அது மிகப் பருத்த கிளைகளைக் கூடச் சுவைத்து விடும்.

ஆனால் இந்தக் கடைவாய்ப் பற்கள் அடிக்கடித் தேய்ந்து விடும். அப்போது அவற்றின் இடத்தில் புதிய பற்கள் முளைக்கும்.

யானையின் வாழ்நாள் முழுக்க ஆறுமுறை இதுபோலும் அப்பற்கள் மீண்டும் மீண்டும் முளைக்கும்.

யானையின் நாற்பதாவது அகவையில்தான் இறுதிமுறையாக அப்பற்கள் முளைக்கும். அதன்பிறகு அப்பற்கள் முளைப்பதில்லை.

எனவே - யானையின் வாழ்நாள் காலம் ஏறத்தாழ ஐம்பத்தைந்து ஆண்டுகள் தாம் - என்றார் அவ் அறிஞர்.


* ஏறத்தாழ அறுபது அயிர (கிலோ) எடையுள்ள மாந்தக் குழந்தை 3அயிர எடை எனில், ஏறத்தாழ இருநூற்று ஐம்பது அயிர எடையுள்ள கரடிக் குட்டியின் எடை எவ்வளவு தெரியுமா?

அரை அயிர எடை (கிலோ) கூட இல்லையாம் . . .

ஏன் அப்படித் தெரியுமா?

அடுத்த இதழில் தெரிந்து கொள்வோமோ!

# முகமூடிக் குழந்தை



முகத்தை மூடும் அளவுடைய ஒரு கெட்டியான தாளை (சார்ட்டு) எடுத்துக்கொள்ளவும். அதனைப் பாதியாக மடித்துக்கொள்ளவும். படத்தில் உள்ள விரும்புகிற விலங்குமுகத்தின் பாதியை (நடுக்கோட்டிற்கு வலது புறமுள்ள முகத்தின் வெளிக்கோட்டினை) கரிக்கோலால் வரைந்து கொள்ளவும். வரைந்த வெளிக்கோட்டின் மேல் கத்தரிக்கோலால் வெட்டவும். வெட்டியபிறகு மடித்த தாளைப்பிரித்தால். விலங்கு முகத்தின் வெட்டுரு கிடைக்கும். விரும்புகிற வண்ணத்தால் முகத்தை அழகுபடுத்தவும். காது, மூக்கு, வாய் மற்றும் முடிப்பகுதியை அழகாகத் தூரிகையால் வரைந்து கொள்ளவும். கண் பகுதிக்கு வட்டமான துளை வரைந்து வெட்டி எடுத்துவிடவும்.

முகமூடியை முகத்தில் கட்டுவதற்கு ஏற்றவாறு நூல் கட்டிக் காதில் மாட்டவும். அல்லது தலைக்கு ஏற்றவாறு தாளால் வளையம் செய்து அந்த வளையத்தில் முகமூடியைச் சரியாக ஒட்டித் தலையில் மாட்டவும்.

முகமூடி மாட்டிய குழந்தையையும், மற்ற குழந்தைகளையும் அந்த விலங்கு போல நடிக்க வைக்கவும், ஒலிக்குறியீடு செய்யவும் பயிற்றலாம்.

ஆக்கம்: **தமிழ்க்கனல்**

தாய்த் தமிழ்க் கல்விப் பணி. பொழில்வாய்ச்சி (பொள்ளாச்சி).

# மிளகு

சமையலுக்குப் பயன்படும் நறுமணப் பொருள்களில் மிகவும் முகாமையானது மிளகு. கொடியாகப் படரும் ஒரு நிலைத்திணையின் காய்தான் மிளகு. தமிழகமே இதற்குத் தாயகம். மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப் பக்கத்தில் கேரளத்திலும் கிழக்கே தமிழகத்திலும் மிளகு பெருமளவில் பயிராகிறது. தமிழகத்திலிருந்துதான் இது மற்ற நாடுகளுக்குப் பரவியது.

வெப்பமும் மழையும் மிகுதியாக உள்ள இடங்களில மிளகு செழிப்பாக வளரும், விதையிலிருந்தும் கொடிகளில் வெட்டிய நறுக்குகளிலிருந்தும் மிளகுக் கொடியைப் பயிர் செய்வார்கள்.

இக்கொடியின் தண்டிலுள்ள கணுக்களில் ஒட்டுவேர்கள் வளரும். இவ்வேர்களின் உதவியால் மரம், கல்தூண் முதலியவற்றின்மேல் கொடி படரும்.

மிளகுக் கொடி நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் பயன் கொடுக்கத் தொடங்கும்.

நீண்ட கதிர்களில் சிறிய, உருண்டையான காய்கள் தோன்றும். இவற்றைப் பறித்து உலர்த்தி மிளகு ஆக்குவார்கள். மிளகு உலர்ந்த பின் கருநிறமாக இருக்கும்.

இதற்குக் "கறி" என்றும் பெயர் உண்டு.

பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள் 'கறி' என்று மிளகைக் குறித்துள்ளனர்.

அதன் மேல் உள்ள கரிய, உலர்ந்த தோலை நீக்கி விட்டால் வெள்ளை மிளகு கிடைக்கும்.

மிளகுக் கொடி 50 ஆண்டுகள் வரை உயிர் வாழ்ந்து பயன் கொடுக்கும் அதற்கு மேலும் கொடிகள் வாழ்வதுண்டு.

இன்று நாம் பயன் படுத்தும் மிளகாயைப் போர்த்திக்கேசியர் தென்அமெரிக்க நாடுகளிலிருந்து இங்குக் கொண்டு வந்து பரப்பினர். அதற்கு முன் தமிழர்கள் மிளகையே பயன்படுத்தி வந்தனர். மிளகாயைவிட மிளகு காரம் குறைந்தது; உடல் நலத்திற்கும் ஏற்றது. இனிய மணமும் அதற்கு உள்ளது. அதனால் உணவுப் பொருள்களுக்கு இது நல்ல சுவையும் மணமும் அளிக்கிறது.

மிளகு சிறந்த மருந்தும் ஆகும். பெரும்பாலான மருந்துகளில் மூன்று மூலி வகைகளைச் சேர்ப்பது தமிழர்களுடைய வழக்கம். அவை, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் திரிகடுகம் ஆகும். இவற்றுள், சிறந்தது மிளகு.

பழங்காலத்தில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகிய பொருள்களுள் முகாமையானது மிளகு. கிரேக்கர், உரோமானியர் முதலிய ஐரோப்பிய நாட்டினர் மிளகுக்கு அதிக விலை கொடுத்து வாங்கிச் சென்றனர். போர்த்துக் கேசியர், தச்சுக்காரர் ஆகியோர் தமிழகத்துக்கு வழி கண்டுபிடிக்க முற்பட்டது, மிளகு போன்ற நறுமணப் பொருள்களுக்காகவே.


# மின்மினிப் பூச்சுகள்

இரவில் மினுக்குமினுக்கு என்று ஒளிவிட்டு, மின்னிக் கொண்டு பறக்கும் சிறு பூச்சிகளைப் பார்த்திருப்பீர்கள். வியப்பான இப்பூச்சிகளே மின்மினிப் பூச்சுகள் ஆகும்.

மின்மினியில் பலவகை உண்டு. தமிழகத்தில் வாழும் இனங்களை விட அமெரிக்காவில் வாழ்பவை உருவில் பெரியவை. பல இனங்களில் ஆண்மட்டுமே பூச்சி வடிவில் இருக்கும். இதற்குச் சிறகுகள் உண்டு. பெண் பூச்சிகளுக்குச் சிறகுகள் இல்லை. இவை புழு வடிவில் இருக்கும். ஆண், பெண் இரண்டுமே ஒளிவிட்டு வெளிச்சம் கொடுக்கும். எனினும் புழு வடிவீல் உள்ள பெண் பூச்சியின் ஒளி சற்று அதிகம். சில இனங்களில் முட்டை, முட்டைப்புழு, கூட்டுப் புழு ஆகிய நிலைகளிலும் ஒளிரும் தன்மை உண்டு.

தமிழகத்தில் காணப்படும் பூச்சிகளில் ஒளி வெளியிடும் பகுதி உடலின் அடிப்புறத்தில் உள்ளது. அடிப்புறம் எட்டுப் பகுதிகளாக இருக்கும். இவற்றுள் வால் பக்கத்திலுள்ள இறுதிப் பகுதியே ஒளிரும் உறுப்பாகும். சில இனங்களில் மார்பின் பக்கங்களிலுள்ள இரு புள்ளிகளிலிருந்தும் ஒளி தோன்றும்.

மின்மினியில் எப்படி ஒளி உண்டாகிறது தெரியுமா?




ஒளிவிடும் தன்மையுள்ள சில வகை அணுக்கள் மின்மினியின் அடிப்பகுதியில் இருக்கின்றன. பூச்சி மூச்சுயிர்க்கும் போது, உட்செல்லும் உயிர்வளியோடு (ஆக்சிசனோடு) இவை சேர்ந்து உயிர்க்கலவை அடைகின்றன. அப்போது உண்டாகும் ஆற்றல் ஒளியாக வெளிப்படுகிறது.

மின்மினியில் தோன்றும் இந்த ஒளி மிகமிகக் குறைந்த அளவே வெப்பம் உடையது. அதனால் நாம் பூச்சியைத் தொடும்போது சூடு இருக்காது.

ஆண்பூச்சியும் பெண் பூச்சியும் ஒன்றையொன்று அறிந்துகொள்வதற்கு இந்த ஒளி உதவுகின்றது.

# கதிரவன்

குழலியும், எழிலும், இளங்கோவும், நம்பியும் வந்து காத்திருந்ததைப் பார்த்து நம்பியின் தந்தை மிகவும் மகிழ்ந்து போனார்.

"உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஆர்வத்தை நான் விளங்கிக் கொள்கிறேன் நல்லது . . . சரி கடந்த முறை கதிரவனைப் பற்றி தானே பேசினோம் . . இன்றைக்கு அது பற்றி மேலும் சில செய்திகளைச் சொல்லப் போகிறேன் என்றவர் மீண்டும் தொடர்ந்தார்.

"கதிரவக் கோளத்துள் உள்ள எரிவளி (அயிட்ரசன்) தன்னளவில் உருமாற உருமாறிக் கதிரவனின் நடுவப் பகுதியில் கதிரம் (ஈலியம்) எனும் தனிப் பொருளா மாறிவிடுகிறது என்று தானே சொன்னேன்.

இந்த உருமாற்றம் தொடர்ந்து இதே போக்கில் நடந்துகொண்டே இருக்கிறது அப்போக்கால் கதிரவனின் வெப்ப அளவு ஏறத்தாழ 6000 நூற்றளவி (சென்டிகிரேட் யாக இருக்கிறது.

அவ் உருவாக்கத்தால் வெளிப்படுகிற நெருப்பு அனலும், வெப்ப வளியு ஏறத்தாழ 50,000 நூற்றளவியைக்கூட எட்டுவது உண்டு.

வலுவான காந்தப் புலத்தில், தடுக்கப்படுகிற வெப்பப் பரவல்களா கதிரவனில் கரும்புள்ளிகள் ஏற்பட்டு வெப்ப நிலை சீரமைக்கப்படுகிறது.

கதிரவனில் உள்ள கரும் புள்ளிகள் என்பவை ஏறத்தாழ ஆயிரம் கோ சதுரஅயிர மாத்திரி பரப்புடையனவாகவும் உள்ளன.

கதிரவனின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் இக் கரும் புள்ளியுள் இடங்களில் 1000 நூற்றளவி அளவில் வெப்பம் குறைவாகவே இருக்கிறது.

சிறு சிறு கரும்புள்ளிகள் சில நாள்களிலும், பெரும் புள்ளிகள் சி மாதங்களிலும் மறைந்து பின் புதிது புதிதாகத் தோன்றும்.

இறுதியாக ஒன்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மற்ற எல்லா விண்மீன்களைப் போலவும், கதிரவனும் தன்னிடையே உள் எரிவளியால் (அயிட்ரசனால்) கதிரவ மண்டலத்தில் உள்ள எல்லாக் கோள்களையு வெப்பத்தால் விழுங்கிவிடும். அப்போது நம் உலகம் முதற்கொண்டு எல்லா கோள்களும் நெருப்புக் குழம்புகளாகக்கூட மாறிவிடலாமாம்.

ஆனால் அவை எல்லாம் இப்போதைக்கு இல்லை. இன்னும் 500 கோ ஆண்டுகள் ஆகலாம்." என்று நம்பியின் தந்தை சொன்னவுடன் பெருமூச் விட்டாள் குழலி.

# அமெரிக்காவைப் பற்றி . . .

உலகிலேயே பணக்கார நாடு அமெரிக்கா என்றால் எப்படி?

அங்கு மட்டுமே ஏதோ செல்வச் செழிப்பான நிலவளம் இருக்கிறதா? அப்படி, இல்லை ஏதும்.

அமெரிக்க அரசு தன் பணக்காரத் தனத்திற்காக நாடுகளை எப்படியெல்லாம் நசுக்குகிறது தெரியுமா? அதனால்தான் பணம் கொழுத்துத் திரிகிறது.

அது பற்றிப் படிப்படியாகத் தெரிந்து கொள்ளலாம்.

இப்போது அமெரிக்காவில் உள்ள ஒரு பெரும் கட்டிடம் பற்றித் தெரிந்து கொள்வோம்.

அமெரிக்காவின் 'எம்பயர்' கட்டிடம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

அந்தக் கட்டிடத்தின் உயரம் 1250-அடி. அதில் 102 மாடிகள் உள்ளன.

அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க 19 மாதங்கள் பிடித்தன.

கட்டிடம் மேலே எழும்பிக் கட்டிட வேலை சூடு பிடித்ததும், கிழமைக்கு ஏறத்தாழ 4 மாடிகள் கட்டப்பட்டனவாம். ஒருமுறை பத்தே நாளில் 14 மாடிகள் கட்டி முடிக்கப் பட்டனவாம்.

## சொல்லடை விடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செ | ங் | கு | ட் | டு | வ | ன் |
| ந் | து | டி | க | ட் | டு | ப |
| த | மை | ய | ன் | ப | ழ | ம் |
| ழ | க | ர | ம் | ண் | கி | ர |
| ல் | ழ | சு | ண் | டை | ண் | அ |

# காகமும் புறாவும்


தாகம் கொண்ட புறாக்கள் இரண்டு
தவித்து நின்றன - அவை
வேகம் குறைந்து வேட்கை மிகுந்து
குடுவை கண்டன
குடுவை அடியில் கொஞ்சம் நீரே
குடியும் இருந்ததாம் - அதைக்
குடிக்க எப்படி முடியும் என்று
குழம்பி நின்றன
காகம் போட்ட கல்லின் கதையை
நினைவில் கொண்டன - அந்தக்
காகம் போலக் கல்லைப் போடக்
கல்லை எடுத்தன
கல்லைப் போட்டு நீரைக் குடிக்கும்
காலம் அதிகமாம் - என்
சொல்லைக் கேளு வேறு வழியை
சொல்லிப் பறந்தன
உறிஞ்சி இரண்டை அலகில் தாங்கி
உடனே வந்தன இரண்டும்
உறிஞ்சி நீரைக் குடித்துத் தாகம்
தணித்துக் கொண்டதன
தாகம் தணிந்த புறாக்கள் இரண்டும்
இணையாய்ச் சேர்ந்தன - அது
வேகமாக வானில் பறந்து
மறைந்து விட்டதன
உறிஞ்சி நீரைக் குடிக்கும் பறவை
புறா ஒன்றுதான் - அதனை
அறிந்து சொன்னேன் அறிந்து கொள்வீர்
அறிவு நன்றுதான்.

- புதுவை. தமிழ்நெஞ்சன்.

---

## இதோ . . .
## நாங்கள் வரைந்த ஓவியங்கள்

*(நீங்கள் ஒவ்வொருவரும் வரைந்த ஓவியங்களை அனுப்பி வையுங்களேன்)*




தமிழன், உடுமலை

## சொல்லடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 9 | | | | |
| | | | 2 | | | |
| 3 | | | | 4 | | |
| 5 | | | | | 6 | |
| | | 7 | | | | 8 |

### இடமிருந்து வலம்

1. இளங்கோ அடிகளின் அண்ணன் (7)
2. பிணைப்பு (3)
3. அண்ணன் (4)
5. சிறப்பு எழுத்து (4)
7. இந்தக் காய் காற்பணமாம் (3)

### வலமிருந்து இடம்

2. விரைவு (3)
7. சுற்று (3)
8. அருகில் (3)

### மேலிருந்து கீழ்

1. தீநாக்கு (5)
4. பழைமை (3)
9. மக்களாட்சி (5)

### கீழிருந்து மேல்

4. ஆரணி - யிலும் உண்டு (3)
6. முதுமை (3)
8. காலிப்பயல் (5)